செ.வெ.எண்:21 நாள்:19.03.2020

**பத்திரிகைச் செய்தி**

மத்திய அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றை ஒரு பேரிடராக அறிவிக்கை செய்துள்ள நிலையில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக குறை கேட்பு கூட்டங்கள் மற்றும் ஆய்வுக்கூட்டங்களை மாநிலம் முழுவதும் ரத்து செய்ய வருவாய் நிர்வாக ஆணையரகத்தால் உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் கொரோனா பீதி பரவியுள்ள நிலையில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் மற்றும் அதிகாரிகள் கூடும் திங்கள் கிழமைகளில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் எதிர்வரும் 31.03.2020 வரை நடைபெறாது எனவும் பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை எழுத்துப்பூர்வமாக தெரிவித்து அம்மனுவினை தபால் முலமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரவீன் பி நாயர் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்**